# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள www.supeedsam.com

திங்கட்கிழமை 28.10.2024 supeedsam.com supeedsam@gmail.com







# அம்பாறை தமிழர்களை தெருவில் நிற்க வைக்கவே பிள்ளையான் களம் இறங்கியுள்ளார்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன்



(கஜனா)

அம்பாறை மாவட்ட தமிழர்களின் பிரச்சனையில் இதுவரையில் குரல் கொடுக்காத அன்றைய முதலமைச்சராக இருந்த பிள்ளையான் இன்று தமிழர்களை தெருவில் நிற்க வைக்கும் நோக்கில் அம்பாறை மாவட்டத்தில் களம் இறங்கியிருப்பதாக முன்னாள்

02 ஆம் பக்கத்தில்...

# கிழக்குப் பல்கலை கழகத்தில் தொடரும் பகிடி வதை

## துணை போகும் நிர்வாகம்

கடந்த 21 ஆம் திகதி அன்று கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட சிரேஷ்ட மாணவர்களால் அவர்களது கனிஷ்ட மாணவர்கள்பகிடி வதைக்குள்ளாகி சுமார் 11 மாணவர்கள் படுகாயங்களுடன் அவதிப்பட்டு வந்த நிலையில் சில கனிஷ்ட மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் தொழில்நுட்ப பீட பீடாதிபதி மற்றும் பாதுகாப்பு மேலதிகாரி ஆகியோருக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

இம்முறைப்பாடு சம்பந்தமாக குறிப்பிட்ட பீடாதிபதி மற்றும் பீட விரிவுரையாளர்கள் மாணவர்களுடன் நடாத்திய விசாரணை மூலம் பகிடிவதை

02 ஆம் பக்கத்தில்...

# சகல கட்சிகளையும் ஒருங்கிணைப்பேன்



## தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் சிறீதரன் சபதம்!

''ஈழத் தமிழர்களின் இறைமை மீட்புக்கான அரசியல் போரில், ஏகோபித்த தலைமைத்துவத்தின் கீழ் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்துப் பயணிப்பதற்கான எத்தனங்களை மேற்கொள்வேன்.''

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...









# வட, கிழக்கில் இருந்து ஆளுமையுள்ளவர்கள் நாடாளுமன்றம் வர வேண்டும்



''ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசுடன் பேச்சு நடத்தி நாட்டில் தீராத இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைப் பெற்றுத் தருவோம். அதற்கான ஆணையைத் தமிழ் மக்கள், தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கும்

02 ஆம் பக்கத்தில்...

# அம்பாறை தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சியை விரட்டியடிக்க வேண்டும்

அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் பாராளுமன்ற பிரதிநித்துவதை இம்முறை தக்கவைத்துக் கொள்ள முடியுமா என கேள்விக்குறி உருவாகியுள்ளது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கட்சி வாத அரசியல் போக்கும் சுயநலவாத முமே இதறகுக்

02 ஆம் பக்கத்தில்...







# அம்பாறை தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சியை விரட்டியடிக்க வேண்டும்

**காரணமாகும். எனவே எமது அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் தேசியப் பட்டியல் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்திற்**காக எம்.ஏ.சுமந்திரனால் வாக்குகளைச் சேகரிக்க களமிறக்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சுமந்திரன்தரப்பை விரட்டியடித்துவிட்டு தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சங்கு சின்னத்திற்கு அமோக ஆதரவை அளித்து எமது தமிழ் பிரதிநிதித்துவத்தை அம்பாறையில் பாதுகாக்க உறுதி பூணவேண்டும்.



இவ்வாறு முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளருமான இரா.துரைரெட்ணம் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு வவுணதீவில் (21) மாலை இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில்.

வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக தமிழ் அரசியல் பரப்பில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள் புரிந்துணர்வுடனும் விட்டுக் கொடுப்புடனும் உறுதியுடன் செயற்பட்ட வேளையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி மட்டும் குறிப்பாக சுமந்திரன் அணி சுயலாபத்துடன் செயற்பட்டதால் ஏனைய தமிழ் தேசியக் கட்சிகள் சங்கு சின்னத்தில் களமிறங்கும் நிலை ஏற்பட்டது.

இன்று இலங்கை தமிழரசுக் கட்சி அதிகார மோகம் கொண்டவர்களால் பல கூறுகளாக உடைந்து நீதி மன்றம் வரை சென்றுள்ளதால் இவர்களுக்கு வாக்களிக்க விரும்பாத நிலையில் உள்ளதை மக்கள் பகிரங்கமாக கூறுகின்றனர்.

எனவே எமது இருப்பையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தக் கூடிய அரசியல் சக்தியாக பரிணமித்துள்ள ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணிக்கும் அவர்களின் சின்னமாகிய சங்கு சின்னத்திற்கும் வாக்ககளிக்க உறுதி பூண்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் ஐந்து பாராளுமன்ற பிரதிநிதித்துவம் உண்டு இதில் விகிதாசார அடிப்படையில் தமிழ் மக்கள் நான்கு பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெற வேண்டும்.

எனவே எமது மக்கள் தேசிய இனப் பிரச்சினை தொடர்பாகவும் மட்டக்களப்பு மாவட் அபிவிருத்தி தொடர்பாகவும் நன்கு அறிந்து செயலாற்றக் கூடிய அணியாக வரம் வரும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கும் அதன் சின்னமாகிய சங்கு சின்னத்திற்கும் ஆணை வழங்க வேண்டும் என்றார்.

## வட, கிழக்கில் இருந்து ஆளுமையுள்ளவர்கள்....

தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் வழங்க வேண்டும்.'' - இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்தார். வெளிநாட்டுத் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே மனோ கணேசன் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்த் தேசியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய ஆளுமையுள்ளவர்கள் வடக்கு, கிழக்கில் இருந்து தெரிவு செய்யப்பட்டு நாடாளுமன்றத்துக்கு வர வேண்டும். வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாங்களும் நிச்சயமாக நாடாளுமன்றம் செல்வோம். நாங்கள் அனைவரும் கரம் கோர்த்துக் கொண்டு சிநேகபூர்வமான முறையில் அநுர அரசுடன் பேச்சு நடத்தி நாட்டில் தீராத இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைப் பெற்றுத் தருவோம்.× - என்றார்.

## கிழக்குப் பல்கலை கழகத்தில் தொடரும் பகிடி வதை....

நடந்தது நிருபிக்கப்பட்டு பகிடி வதையில் சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு 25ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இரு வார வகுப்பு தடை எழுத்து மூலம் அறிவிக்கப் பட்டது.

இதைத் தொடர்ந்து தொழில்நுட்ப பீடத்தில் பதட்ட நிலை உருவாகி சில சிரேஷ்டமாணவர்கள் பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்துடன் இணைந்து 25 ஆம் தேதி திகதி மாலை 4.30 நான்கு முப்பது மணி தொடக்கம் சுமார் 4 மணிநேரம் பேரவை கட்டிடத்தின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அங்கு பீடாதிபதிக்கு எதிராக கோஷம் எழுப்பப்பட்டு தங்களது வகுப்புத் தடை நீக்கப்படவேண்டுமென கோரிக்கை விடுத்தனர்.

இதற்கிடையில் உப வேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் அவர்களுக்கும் பீடாதிபதி பேராசிரியர் த. மதிவேந்தன் அவர்களுக்கும் இடையில் நடந்த கலந்துரையாடலில் பீடாதிபதி அவர்கள்தான் பகிடிவதை நடந்ததற்கான தகுந்த ஆதாரங்களின் அடிப்படையிலும் இதற்கு முதல் பல தடவை இதே மாதிரியான சம்பவங்களுக்கு எடுத்த தீர்மானத்தின் படியும் தான் இந்த வகுப்பு தடையை விதித்ததாக கூறியுள்ளார். எனினும் உபவேந்தர் வ. கனகசிங்கம் அவர்கள் பீடாதிபதி யின் கருத்தை செவிமடுக்காமல் மாணவர்களின் கோசத்திற்கு பயந்து பீடாதிபதி வழங்கிய வகுப்புத் தடையை நீக்கி உத்தரவு பிறப்பித்துள்ளார். இது பகிடி வதையில் ஈடுபட்ட மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் செயலாகவே பார்க்க தூண்டுகிறது. . பல்கலைக்கழகங்களில் பகிடிவதையை இல்லாதொழிக்க எடுக்கும் முயற்சிகளுக்கும் சட்டங்களுக்கும் மத்தியில் இவ்வாறான செயற்பாடுகள் கேள்விக்குறியாக உள்ளது. இது சம்பந்தமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தகுந்த விசாரணை நடத்தி பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## சகல கட்சிகளையும் ஒருங்கிணைப்பேன்

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு கிளிநொச்சி - செல்வாநகர் வட்டாரத்தில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்பாட்டாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு உள்ளும் புறமுமாய் ஏற்பட்டுள்ள பிளவுகள், எமது மக்களிடையே பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அதனால் எமது மக்கள் அரசியல் வெறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். இந்த நிலை மாற வேண்டுமானால், தமிழ்த் தேசியத் தளத்தில் இயங்கும் கட்சிகளும், அதன் தலைமைகளும் ஓரணியில் இணைய வேண்டிய காலத் தேவை எழுந்துள்ளது.

உட்கட்சி முரண்நிலைகளைத்தாண்டி இதுசாத்தியமா? என்ற கேள்வி இருந்தாலும், இனத்தின் இருப்புக்காக அதனைச் சாத்தியமாக்க வேண்டிய காலக் கடமை எமக்கு தரப்பட்டுள்ளதை உணர்ந்து, கொள்கை ரீதியான உடன்பாடுகளின் அடிப்படையில் முறைமைப்படுத்தப்பட்ட இணக்க நிலையை உருவாக்கவும், அதன்வழி ஈழத் தமிழர்களின் அரசியல் வெளியில் காத்திரமான தலைமைத்துவத்தை உருவாக்கவும் தொடர்ந்தும் உழைப்பேன் - என்றார்.

## அம்பாறை தமிழர்களை தெருவில் நிற்க

பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கல்முனையில் இடம்பெற்ற பிரச்சார கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

கடந்த காலத்தில் பாராளுமன்ற பிரதிநிதிதுவம் இழந்த போது தமிழரசு கட்சி அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் அவர்களை அனாதையாக விடக்கூடாது அவர்களை கௌரவப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் தலைவர், பொதுச் செயலாளர் ஆகியோர் பின்னடைவு அடைந்த போதிலும் தங்களுக்கு கிடைத்த ஒரே ஒரு தேசிய பட்டியல் அங்கத்துவத்தினை அம்பாறை மாவட்டத்திற்கு கொடுத்து கௌரவப் படுத்தி இருந்தது. எனவே ஒவ்வொரு தமிழ் மக்களும் இந்த கட்சிக்கு கடமைப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

2024 ம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் ஒரு பிரதிநிதித்துவத்தை இழக்கின்ற போது அதனால் ஏற்படுகின்ற விளைவானது மிகவும் பாரதூரமாக இருக்கும். அந்த நிலையினை அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் மூச்சு விட முடியாத ஒரு நிலையாகவே நான் கருதுகிறேன்.

இந்த பொது தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் வரவில்லை என்றால் எந்த ஒரு காலகட்டத்திலும் தமிழ் பிரதிநிதித்துவம் அம்பாறை மாவட்டத்திற்கு வராது என்பதை நான் உறுதியாக கூறுகிறேன். இப்படி ஒரு நிலை ஏற்படுமாக இருந்தால் எதிர்வரும் காலத்தில் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் அடிமையாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும் என்பதை அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு பிரதிநிதித்துவம் இழக்கப்படும் பட்சத்தில் முஸ்லிம்களிடம் கையேந்தி நிற்கும் நிலை ஏற்படும் என்பதை அம்பாறை தமிழர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு அம்பாறை மாவட்டத்திற்கு என்ன செய்தது என கேள்வி கேட்கும் கட்சிகளுக்கு மீண்டும் மாறி அதே கேள்வியை கேட்குமாறு கூறிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பிர் கவிந்திரன் கோடீஸ்வரன், முதலமைச்சராக இருந்த பிள்ளையான் அம்பாறை மாவட்டத்திற்கு என்ன செய்து இருக்கிறார்.

அம்பாறை மாவட்டத்திற்கு அபிவிருத்திக்காக ஏதேனும் ஒரு சதம் செலவழித்து இருக்கிறாரா? அதேபோன்று அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரச்சினைகளுக்கு எப்போதாவது குரல் கொடுத்திருக்கின்றாரா? என கேள்வி எழுப்பியதோடு

அம்பாறை மாவட்டத்தில் இம்முறை படகு சின்னம் களம் இறக்கப்பட்டிருப்பது இங்கிருக்கும் பிரதிநிதித்துவத்தை இழக்க செய்து இங்குள்ள தமிழர்களை நிராயுதபாணியாக்குவதே நோக்கமாகும். நடுத்தெருவில் இந்த மக்களை நிக்க வைக்கும் ஒரே நோக்கத்திற்காகவே அம்பாறை மாவட்டத்தில் களம் இருக்கிறார்கள். என சுட்டிக்காட்டியிருந்தார்.

25 வருடமாக கபினட் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா அம்பாறை மாவட்டத்திற்கு எவ்வித காரியங்களும் இதுவரையில் செய்யப்படாத நிலையில் இப்போது பொது தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் களம் இறக்கி இருக்கிறார். இங்கு சிறிதளவு வாக்கை பெற்றுக் கொண்டு அம்பாறை தமிழர்களின் வாக்குகளை சூறையாடி தனது சகாக்களில் ஒருவரை தேசியப் பட்டியலில் நிரப்புவதற்காக அம்பாறை மாவட்டத்தில் களமிறங்கி இருக்கிறார். என கூறியிருந்தார்.

தோற்கப் போகிறோம் என்று தெரிந்தும் யாழ்ப்பாணத்தில் இருந்து சைக்கிளில் அம்பாறை மாவட்டத்திற்கு வருகிறார்கள். யாழ்ப்பாணத்தில் ஒரு பிரதிநிதித்துவத்தை எடுப்பதற்காக இந்த மக்கள் பலிக்கடா வா? என மேலும் அவர் இனிய கட்சிகளின் நிலைப்பாடு குறித்தும் தெளிவுபடுத்தினார்.



# கொட்டாஞ்சேனையில் டக்ளஸ் தேவானந்தாவிற்கு மக்கள் அணி திரண்டு மாபெரும் வரவேற்பு





முன்னாள் அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் வேட்ப்பாளர்கவ் அறிமுக நிகழ்வு நேற்று கொட்டாஞ்சேனையிர் இடம்பெற்றது.

ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய ஆலயத்தில் ஆலய பிரதம குரு சுப்ரமணிய குருக்கள் அவர்களின் தலைமையில் பூஜைகள் இடம்பெற்று மற்றும் சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா தமிழ்நாடு நவக்களனிபுர சிவா குருக்கள் அம்பிகா ஜோதிடம் சிவனேசன் சர்மா கொழும்பு கொச்சி கடை பொன்னம்பலாகேஸ்வர உதவி குரு ஈசன் சர்மா மற்றும் தர்சக சர்மா ,யாழ் ரகுபதி சர்மா ஆகியோரும் ஆசி வழங்கினர். ஆலய தர்மகத்தாக்களினால் ஆலய அறங்காவலர் சபையினால் பொன்னாடை போர்த்தி மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதன் பின்னர் ஜிந்துப்பிட்டி ஆலயத்தில் இருந்து விவேகானந்தா சபை வரை மேளதாளங்களுடன் அவர் அழைத்துச் செல்லப்பட்டார். பின்னர் விவேகானந்தா சபையில் மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது. கிரன்பாஸ் விஜிதகேரத் இலங்கை நாடு ஒற்றுமையாக பல்லினம் வாழும் மக்கள் வாழ்வதற்கான ஒரு முன்னுதாரணமாக இம்முறை ஈழ மக்கள் ஜனநாயக கட்சி இம்முறை கொழும்பு மாநகரில் போட்டியிடுகின்றது. இலங்கைவாழ் மக்கள் ஒரு தாய் மக்களாக வாழ வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தினார். மற்றும் எதிர்பாராததை எதிர் பாருங்கள் என்பதற்மைய கொழும்பு நரில் தங்களது வாழ்வு சுபீட்சம் அடைய நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்தி தருவார் என பாபுசர்மா தனது உரையில் உறுதிப்படுத்தினார்.

மேலும் நாங்கள் எப்போதும் மக்களுக்கான சேவையில் இருக்கிறோம். மக்களுடைய தேவைகளை அறிந்து அந்தந்த நேரங்களில் செய்யக்கூடிய காரியங்களை கடினமான காலங்களில் இருந்து செய்து வருகின்றோம். தொடர்ந்தும் மக்களுக்காக செயற்படுவோம் பயணிப்போம் என டக்ளஸ் தேவானந்தா தனது உரையின் போது குறிப்பிட்டிருந்தார் .

மற்றும் நிகழ்வின்போது பலரால் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு கௌரவப்படுத்தியதோடு தமிழ்நாடு களனிபுர அறநெறி பாடசாலை தலைமை ஆசிரியர் கோசலா சிவனேசன் சர்மா, அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான வருடாந்த கொடுப்பனவை அதிகரிக்க வேண்டும் எனவும் ஐயப்ப சங்க ஒன்றிணைப்பாளர் பிச்சைகிருஷ்னா அவர்கள் கொழும்பிற்கும் தூத்துகுடிக்கும் இடையிலான கப்பல் சேவையினை ஆரம்பிப்பதற்கான கோரிக்கை கடிதத்தினையும் மேடையில் வைத்து கையளித்திருந்தார்.

## கல்முனை ஆதார வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணராக மருத்துவர் அன்ரன் சுவர்ணன் பதவியேற்பு

( வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்தியசாலையின் புதிய சத்திர சிகிச்சை நிபுணராக மருத்துவர் அன்ரன் சுவர்ணன் நேற்று முன்தினம் பதவியேற்றார்.

களுவாஞ்சிக்குடி ஆதார வைத்திய சாலையில் சேவையாற்றிய இவர் இடமாற்றம் பெற்று இங்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த இவர் புனித மைக்கல் கல்லூரியில் பயின்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மருத்துவப் பட்டப் படிப்பை பூர்த்தி செய்து கொழும்பு பல்கலைக்கழகத்தில் MD



மருத்துவ முதுமாணிப் பட்டத்தையும் பெற்றார்.


ஐக்கிய இராட்சியத்தில் அறுவை சிகிச்சையில் வெளி நாட்டு பயிற்சி பெற்ற இவர் மேலும் MRCS(Edinborough),MRCS(Glasgow) போன்ற பட்டங்களைப் பெற்றுள்ளார். அதி விசேட பயிற்சிகளை வயிற்றறை உட்காண் அறுவைச் சிகிச்சை (பெருங்குடல் நேர்குடல்),ரோபோடிக் முறை அறுவைச் சிகிச்சை.Specially trained in colorectal surgery in laparoscopy and Robotic surgery பெற்றுள்ளார்.

இங்கு ஏலவே இருந்த சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் சமீம் இடமாற்றலாகிச் சென்ற இடத்திற்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புலம் பெயர்ந்த தமிழ் மக்களுக்கு உதவிக்கரம் நீட்டிய ஆன்மா விண்ணுலகம்

(வாஸ் கூஞ்ஞ)

சுவீஸ் நாட்டுக்கு புலம்பெயர்ந்து சென்ற தமிழ் மக்களுக்கு பல வழிகளிலும் குறிப்பாக கத்தோலிக்க பணியக வளர்ச்சிக்கும் பல வழிகளில் உதவிகள் புரிந்து வந்த சுவிட்சர்லாந்தின் ஒல்ரன் கப்புச்சினர் சபையைச் சார்ந்த அருட்சகோதரர் வேர்னர் கோல்ரி அவர்கள் கடந்த திங்கள் கிழமை (21) அந்நாட்டில் இறைபாதம் அடைந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



இவரின் நல்லடக்கம் எதிர்வரும் 29.10.2024 அன்று செவ்வாய் கிழமை நண்பகல் 14.30 மணியளவில் லுட்சேரன் கப்புச்சினர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியைத் தொடந்து நல்லடக்கம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் இலங்கையிலுள்ள தமிழ் மறைமாவட்டங்களுக்கு பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்த ஓர் உன்னதமான மனிதர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை மாணவிகளுக்கு பேண்தகு நில முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி





(நூருல் ஹுதா உமர்)

தரம் ஒன்பது பிரிவு மாணவிகளுக்கான பேண்தகு நில முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி சுற்றுலா மற்றும் நில அமைச்சு (நில பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களம்) யினால் விவசாய துறை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) தரம் ஒன்பது பிரிவு மாணவிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரியின் முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் (SLEAS) தலைமையில் நவீனமயப்படுத்தப்பட்ட ஸ்மார்ட் மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ் விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு பிரதான வளவாளராக கல்முனை பிரதேச செயலகத்தின் காணி பயன்பாட்டு உத்தியோகத்தர் ஐ.எம். ஜவ்ஹர், சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் காணி பயன்பாட்டு உத்தியோகத்தர் எஸ்.எச். சன்ஜிர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் விவசாய பாட ஆசிரியர்களான எப். றிஸ்னி முபிஸால், ஏ.எம். அஜ்மீர், டி. கோகுல வாசன் மற்றும் மாணவிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## எமது மாவட்டத்தை முன்னேற்ற 25 ஆயிரம் மாணவர்களில் முதலீடு செய்கிறேன்

(த.சுபேசன்)

எமது மாவட்டத்தை முன்னேற்ற மாவட்டத்திலுள்ள 25ஆயிரம் மாணவர்களில் முதலீடு செய்திருக்கிறேன் என பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் சுட்டிக் காட்டியுள்ளார்.

அண்மையில் சாவகச்சேரியில் இடம்பெற்ற பிரசார நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

எதிர்காலத்தில் வேலைச்சந்தைக்குப் பொருத்தமான இளைஞர்-யுவதிகளை உருவாக்கும் நோக்கில் எனது சொந்த நிதியை முதலீடு செய்துள்ளேன்.

அதாவது யாழ் மாவட்டத்தின் எட்டு பிரதேசங்களில் என் கனவு யாழ் அக்கடமியை நிறுவி ஒவ்வொரு பிரதேசத்திலும் முதற்கட்டமாக 1200மாணவர்களை உள்வாங்கி இலவச தொழில்நுட்ப



கல்வியை வழங்கி வருகிறேன்.

இன்று பெருமளவான இளைஞர்கள் வெளிநாட்டுக்குச் சென்று அங்கு வேலை செய்ய முடியாமல் மீண்டும் நாடு திரும்புகின்றனர். வெளிநாடுகளில் தேவைப்படும் கல்வித் தகைமை எமது இளைஞர் -யுவதிகளிடம் இல்லை அதுவே அவர்கள் மீண்டும் நாடு திரும்ப காரணமாக அமைகின்றது.

எனவே தான் நாம் தற்போது தொழில்நுட்ப கல்வியை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கி வருகிறோம்.

25இலட்சம் ரூபாய் பெறுமதியான கற்கையை ஒவ்வொரு மாணவருக்கும் வழங்கி வருகிறோம்.

அடுத்த பத்து வருடங்களில் யாழ் மாவட்டத்தில் இருந்து 25ஆயிரம் மாணவர்களை சர்வதேச வேலைச் சந்தைக்கு தகுதியானவர்களாக உருவாக்குவதே எனது இலக்காக உள்ளது.

இவ்வாறு உருவாக்கப்படும் மாணவர்கள் புலம்பெயர வேண்டிய தேவை ஏற்படாது.சொந்த நாட்டில் இருந்து கொண்டே வெளிநாட்டு நிறுவனங்களில் பணி புரிந்து டொலரில் சம்பாதிக்கக்கூடிய நிலை காணப்படும்.

இதனூடாக எமது மாவட்டம் வளர்ச்சி காண்பதுடன்-இளைஞர்-யுவதிகள் புலம்பெயர்வதும் கட்டுக்குள் கொண்டு வரப்படும். என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

## ஓட்டமாவடி தேசிய பாடசாலை மாணவன் ஆகிப் அஹமட் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு



(எச்.எம்.எம்.பர்ஸான்)

ஓட்டமாவடி தேசிய பாடசாலையில் தரம் ஆறில் கல்வி கற்கும் மாணவன் ஆகிப் அஹமட் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பாடசாலையின் அதிபர் அல்ஹாஜ் எம்.ஏ.ஹலீம் இஸ்ஹாக் தெரிவித்தார்.

குறித்த மாணவன் மாகாண மட்ட சிங்களப் பேச்சுப் போட்டியில் பங்குபற்றி முதலிடம் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகி பாடசாலைக்கும் பிரதேசத்திற்கும் பெருமை சேர்த்த மாணவனுக்கும் பயிற்சியளித்த ஆசிரியர்களுக்கும் பாடசாலை அதிபர் பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்துள்ளதுடன், மாணவன் தேசிய மட்டத்திலும் சாதனை படைக்க பிரார்த்தனைகளைப் புரிந்துள்ளார். இம் மாணவன் ஓட்டமாவடி தேசிய பாடசாலையின் பிரதி அதிபர் எம்.ரீ.எம். றியாஸ் நளீமி மற்றும் ஓட்டமாவடி தாருல் உலூம் வித்தியாலய ஆசிரியை எப். பர்ஸானா ஆகியோரின் புதல்வராவார்.

# அன்று மக்களுக்காக யுத்தத்தில் களமாடிய போராளிகள் நாங்கள், 15 வருடங்களின் பின் இன்று அரசியலில் களமிறங்கியுள்ளோம்!

## ஜனநாயக பெண் போராளி வேட்பாளர் தவமணி காட்டம்!

( வி.ரி.சகாதேவராஜா)

மக்களுக்காக அன்று யுத்தத்தில் களம் ஆடினோம். இன்று 15 வருடங்களுக்கு பிறகு அதே மக்களுக்காக ஜனநாயக வழியில் அரசியலில் களமாட பிரவேசித்திருக்கின்றோம். உங்கள் ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.

இவ்வாறு ஜனநாயகதமிழ்த்தேசிய கூட்டணியில் அம்பாறை மாவட்டம் சார்பாக சங்கு சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயக போராளிகள் கட்சியின் உறுப்பினர் சுப்பிரமணியம் தவமணி தெரிவித்தார் .

காரைதீவைச் சேர்ந்த அவர் இன்று ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடாத்திய ஊடக சந்திப்பில் மேலும் தெரிவிக்கையில் ...



அன்று அகிம்சை வழியில் போராடினோம் .பின்பு ஆயுத வழியில் போராடினோம்.இன்று அரசியல் போராட்டம் இடம்பெறுகின்றது.

தென் இலங்கையில் அன்று ஆயுதம் தாங்கிய போராட்டம் இன்று அரசியல் போராட்டத்தில் வெற்றி பெற்றிருக்கின்றது அவரே நாட்டின் ஜனாதிபதியாக வந்திருக்கின்றார்..

அதேபோல் நாமும் ஆயுத போராட்டத்தில் களமாடிய நாம் இன்று அதே மக்களுக்காக அரசியல் களம் ஆட வந்திருக்கின்றோம். எனவே வெற்றி நிச்சயம்.

தாயகம் தேசியம் சுயநிர்ணயஉரிமை போன்ற தாரக மந்திரங்களை எதிர்கொண்டு இந்த தேர்தலில் நாங்கள் இறங்கி இருக்கின்றோம் .

பெண்கள் சிறுவர் வயோதிபர் உரிமைக்காக நாம் போராடி இருக்கின்றோம்.வருடாவருடம் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. ஆனால் உண்மையில் மகளிருக்கு இதுவரை விடுதலை கிடைக்கவில்லை. வீட்டிலும் வன்முறை நாட்டிலும் வன்முறைகள்.

உரிமைகள் இல்லை. பெண்களுக்கு எப்பொழுது விடுதலை கிடைக்கின்றதோ அன்றுதான் உண்மையான மகளிர் தினம்.

நான் ஒரு போராளி. மேலும் ஒரு மாற்றத் திறனாளி. மாற்றுத்திறனாளிகளுக்கு குரல் கொடுக்க வேண்டும் என்று பல அரிசியல்கட்சியிடமும் கேட்டோம்.

ஆனால் யாரும் கணக்கெடுக்கவில்லை. விசேட தேவை உள்ளவர்கள் நிச்சயமாக அரசியல் ஈடுபட வேண்டும். நான் அதற்கு ஒரு முழு உதாரணமாக இருக்கின்றேன் .

எனவே அம்பாறை மாவட்டத்தில் அனைத்து மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட அனைவரும் என்னை ஆதரித்து பாராளுமன்ற உறுப்பினர் ஆக்க வேண்டும் .

பெண்கள் அரசியலில் முன்வர வேண்டும். 52% வாக்களிக்க தகுதி உள்ள பெண்களுக்கு அரசியலில் சம உரிமை வழங்கப்படவில்லை. எனவே எனக்கு பின்னால் அடுத்தடுத்த தேர்தலில் வர இருக்கின்றன .அதற்கு கட்டாயம் நீங்கள் கைகோர்க்க வேண்டும்.

அன்று எதையும் எதிர்பாராமல் மக்களுக்காக நாங்கள் களத்தில் போராடினோம். அதேபோல் இன்று அரசியலில் அதே மக்களுக்காக ஒரு அங்கீகாரத்தை கேட்டு நிற்கின்றோம் .

நாங்கள் மக்களுடைய சேவை செய்வோம். அரசியல் பெண்கள் ஈடுபட வேண்டும். மக்கள் மீதும் தேசியத்தின் மீதும் நம்பிக்கை வைத்து பெண்கள் முன்வராதது கவலை அளிக்கின்றது. சமூகத்துடன் சேவை செய்யும் நான் அரசியலுக்கு வந்திருக்கின்றேன். எனது இலக்கம் எட்டு. என்னை ஆதரித்து பாராளுமன்றத்துக்கு அனுப்புங்கள்.

உங்களுக்கான அனைத்து உரிமைகளையும் பெற்று தருவேன்.

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் சங்கு சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் நலனை கருத்தில் கொண்டு தமிழ் வாக்குகளை பிரிக்காமல் ஐந்து கட்சிகள் ஒன்றிணைந்து சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்றோம்.

ஜனநாய போராளிகள் கட்சி சார்பாக நான் எட்டாம் இலக்கத்தில் போட்டியிடுகின்றேன்.நம் மக்களின் நலனுக்காக களமாடிய பெண்களில் நானும் ஒருவள். அங்கவீனமான நிலையிலும் எமது தமிழ் மக்களின் நலனுக்காக இன்று தேர்தல் களத்தில் ஒரு பெண்ணாக போட்டியிடுகின்றேன். பெண்களுக்கான அங்கிகாரம் கிடைக்க பெண்கள் பக்கபலமாக செயற்பட வேண்டும்.

சமூகத்தின் முதுகெலும்பான பெண்கள் சமூக முன்னேற்ற செயற்பாடுகளில் முன்னுக்கு வர வேண்டும். ஆகவே அம்பாறை மாவட்ட தமிழ் பெண்கள் ஒற்றுமையாக சங்கு சின்னத்திற்கும் எனது இலக்கமான 08 க்கும் வாக்களிக்குமாறு அன்பாக கேட்டுக் கொள்கிறேன்.

அம்பாறை மாவட்ட தமிழர்களின் நலனில் அக்கறை இல்லாமல் தனித்தனியாக போட்டியிடும் கட்சிகளை மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்றார்.

# இந்தோனேஷிய தூதுவருடன் சர்வமதத் தலைவர்கள் சந்திப்பு







(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஸ்ரீ லங்கா - தேசிய சர்வ மத குரு ஒன்றியத்தின் தலைவர் சாஸ்த்ரயதி கலாநிதி கலகம தம்மரன்ஸி நாயக்க தேரர் தலைமையில் சர்வ மதத் தலைவர்களின் பங்களிப்புடன்

இந்தோனேஷிய தூதுவர் தேவி குஸ்டினா டோபின்ங் அவர்களுடனான விஷேட கலந்துரையாடலொன்று இலங்கைக்கான இந்தோனேஷிய தூதரகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இக்கலந்துறையாடலில் சாஸ்த்ரயதி கலாநிதி கலகம தம்மரன்ஸி நாயக தேரர், சிவ ஸ்ரீ கலாநிதி ராமச்சந்திர பாபுசர்மா குருக்கள், அல்-ஹாஜ் அஷ்-ஸெய்யத் கலாநிதி ஹஸன் மௌலானா அல்-காதிரி, கலாநிதி நிஷான் சம்பத் குரே பாதிரியார் உட்பட பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி சகல மதத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலின் போது இலங்கை மற்றும் இந்தோனேஷியா இருநாடுகளுக்கிடையில் மதங்களுக்கு இடையே மத நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வை பேணுவதில், சர்வமத அமைப்பினரின் பங்கு முக்கியம் என்பதை பற்றியும், அதன் விரிவான திட்டங்கள் பற்றியும் விஷேடமாக கலந்துரையாடப்பட்டன.

# ஆசிரிய கலாசாலை அணியின் 8 வது ஒன்றுகூடலும் மணிவிழா மற்றும் மணவிழாக் கொண்டாட்டமும்





( வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையின் 91/92 ஆண்டு புலன அணியினரின் எட்டாவது ஒன்று கூடலும் அணி உறுப்பினர் திருமதி டில்பிரபா அருள்பிரகாசத்தின் மணி விழாக் கொண்டாட்டமும் மற்றும் உறுப்பினர்களான நடா- வசந்தி தம்பதியினரின் 26 வது ஆண்டு மணவிழாக் கொண்டாட்டமும் சனிக்கிழமை (26) சிறப்பாக இடம்பெற்றது.

அணித் தலைவரும் பிரபல ஊடகவியலாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான தேசமான்ய வித்தகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா தலைமையில் திருகோணமலை மற்றும் கோட்டைக் கல்லாற்றில் இவ் இரு நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெற்றன.

மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையின் 1991/92 புலன அணியின் திருகோணமலை தொடக்கம் திருக்கோவில் வரையிலான புலன அணி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். காரைதீவு முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலும் கலந்து சிறப்பித்தார்.

# ஜோதிடம் பார்ப்பதாக கூறி நகை திருட்டு



மன்னார் நானாட்டான் பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள நறுவிலிக்குளம் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றுக்கு சிறுவன் ஒருவருடன் சென்ற பெண் ஒருவர் அங்குள்ள வீடு ஒன்றுக்குச் சென்று ஜோதிடம் பார்ப்பதாக கூறி வீட்டில் இருந்தவர்களை சுய நினைவை இழக்கச் செய்து சுமார் 20 இலட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியை (நகை) திருடிச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை (25) காலை 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில் ,,

நறுவிலிக்குளம் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றுக்கு சிறுவன் ஒருவருடன் சென்ற பெண் ஒருவர் கோவிலுக்கு நிதி சேகரிக்க வந்துள்ளதாக கூறியுள்ளார்.இந்த நிலையில் அவர்கள் பணத்தை கொடுக்க குடிக்க நீர் கேட்டுள்ளனர்.

இதன் போது அவர்கள் குடிக்க நீர் கொடுத்து உள்ளனர். இதன் போது தான் ஜோதிடம் பார்த்து கூறுவதாக கூறி பலவந்தப்படுத்தி வீட்டில் இருந்த இருவருக்கு ஜோதிடம் பார்த்துள்ளார்.

இதன் போது குறித்த இருவருக்கும் சுய நினைவை இழக்கச் செய்யும் வகையில் மருந்து பூசிய நிலையில் குறித்த இருவரும் சுய நினைவை இழந்த நிலையில் குறித்த பெண் அணிந்திருந்த சுமார் 20 இலட்சம் ரூபா பெறுமதியான தாலிக் கொடியை அபகரித்துச் சென்றுள்ளார்.

மாலை 5 மணிக்கு பின்னர் அவர்களுக்கு சுய நினைவு திரும்பிய நிலையில் குறித்த விடையம் தெரிய வந்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை, சந்தேகிக்கப்படும் குறித்த பெண் சிறுவன் ஒருவருடன் குறித்த பகுதியில் வீதியில் சென்ற இஇகூங வீடியோ காட்சியும் வெளியாகி உள்ளது.

# வாக்காளர் அட்டை விநியோகிக்கும் நடவடிக்கை!

2024 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகிக்கும் நடவடிக்கை (27) நாடுபூராகவும் ஆரம்பமாகியுள்ளது.

இந்நிலையில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் ஒரு தொகுதியாக அடங்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் 2024 ஆம் ஆண்டு தேருநர் இடாப்பின் பிரகாரம் 100,907 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான வாக்காளர் அட்டைகளை தபால் உத்தியோகத்தர்கள் இன்று காலை முதல் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் விநியோகித்து வருவதை காணமுடிகிறது.



# நீலப் பொருளாதாரம் என்ற எண்ணக்கரு இலங்கையின் பொருதாரத்தை எவ்வாறு பாதிக்கும்?

இலங்கை போன்ற தீவு நாடுகளுக்கு, கடல் என்பது வெறும் நீர்நிலை மட்டுமல்ல; அது பொருளாதார வளர்ச்சிக்கான அபரிமிதமான வாய்ப்புகளைத் தரும் ஒரு சொத்து. இதனை உணர்ந்து, உலக நாடுகள் கடல்சார் வளங்களை நிலையான முறையில் பயன்படுத்தி பொருளாதாரத்தை வளர்ப்பதற்கான ஒரு புதிய அணுகுமுறையை நோக்கி நகர்ந்து வருகின்றன. இந்த அணுகுமுறைதான் 'நீலப் பொருளாதாரம்'.



### நீலப் பொருளாதாரம் என்றால் என்ன?

நீலப் பொருளாதாரம் என்பது கடலின் அனைத்து வளங்களையும் நிலையான முறையில் பயன்படுத்தி பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கான ஒரு விரிவான கருத்தியல் ஆகும். இதில் கடல் உணவு, கடல்சார் போக்குவரத்து, கடலின் உயிரின பன்வகைமை, கடலடி கனிமங்கள், கடல்சார் சுற்றுலா, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி போன்ற பல்வேறு துறைகள் அடங்கும்.

### இலங்கைக்கு நீலப் பொருளாதாரம் ஏன் முக்கியம்?

பொருளாதார வளர்ச்சி: கடல்சார் துறையில் முதலீடு செய்வதன் மூலம், இலங்கை புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி, ஏற்றுமதியை அதிகரித்து, பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்த முடியும்.

உணவு பாதுகாப்பு: கடல் உணவு இலங்கையின் உணவு பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிக்கிறது. நீலப் பொருளாதாரம் மூலம் மீன்பிடித் துறையை மேம்படுத்தி, உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்யவும், ஏற்றுமதி செய்யவும் முடியும்.

சுற்றுலா: இலங்கையின் கடற்கரைகள் உலகளவில் பிரபலமானவை. நீலப் பொருளாதாரம் மூலம் சுற்றுலாத்துறையை மேம்படுத்தி, வெளிநாட்டு வருவாயை அதிகரிக்க முடியும். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி:கடலில் இருந்து காற்று மற்றும் அலைகள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம், இலங்கையின் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்யவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் முடியும்.

### நீலப் பொருளாதாரம் இலங்கையின் பொருளாதாரத்தை எவ்வாறு பாதிக்கும்?



நேரடி வேலைவாய்ப்புகள்: மீன்பிடி, கடல்சார் போக்குவரத்து, கடல்சார் சுற்றுலா போன்ற துறைகளில் நேரடி வேலைவாய்ப்புகள் உருவாகும்.

மறைமுக வேலைவாய்ப்புகள்: கடல்சார் உள்கட்டமைப்பு, மீன்பிடி கப்பல்கள் கட்டுதல், சுற்றுலா உள்கட்டமைப்பு போன்ற துறைகளில் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும். ஏற்றுமதி அதிகரிப்பு: கடல் உணவு, கடல்சார் பொருட்கள் போன்றவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம், வெளிநாட்டு வருவாய் அதிகரிக்கும்.

உள்நாட்டு வருவாய்: சுற்றுலாத்துறை வளர்ச்சியின் மூலம் உள்நாட்டு வருவாய் அதிகரிக்கும். தொழில்நுட்ப வளர்ச்சி: கடல்சார் தொழில்நுட்பத்தில் முதலீடு செய்வதன் மூலம், தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்படும்.

### சவால்கள் மற்றும் தீர்வுகள்

நீலப் பொருளாதாரத்தை செயல்படுத்துவதில் சில சவால்கள் உள்ளன. அவற்றில் முக்கியமானவை: சட்ட மற்றும் கொள்கை சட்டக்கட்டல்கள்: கடல்சார் வளங்களை பாதுகாத்து, நிலையான வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் சட்ட மற்றும் கொள்கை சட்டக்கட்டல்களை உருவாக்குதல் அவசியம். தொழில்நுட்பம்: நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி கடல்சார் வளங்களை மேலாண்மை செய்ய வேண்டும்.

திறன் மேம்பாடு: கடல்சார் துறையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குத் தேவையான திறன்களை மேம்படுத்துதல் அவசியம்.

### முடிவுரை:

நீலப் பொருளாதாரம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு புதிய வழியைத் திறந்து வைத்துள்ளது. ஆனால், இந்த வாய்ப்பை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள, அரசு, தனியார் துறை மற்றும் சமூகத்தின் ஒத்துழைப்பு அவசியம். நிலையான வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் கடல்சார் வளங்களை பாதுகாத்து, பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**ஆக்கம்:**
**கலாநிதி. ஏ. எல். முஹம்மது அஸ்லம்**
**இலங்கை திட்டமிடல்**
**சேவை உத்தியோகத்தர்.**
**பிரதேச செயலகம் சம்மாந்துறை**



















**(கொட்டகலை நிருபர்)**

அகில இலங்கை தமிழ் மொழி தினப்போட்டி அண்மையில் கொழும்பு பம்பலபிட்டிய இந்து கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டியில் பங்குகொண்ட நு / கொட்டகலை தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் குழு நடத்தில் இரண்டாம் இடத்தை பெற்று பாடசாலைக்கும் சமூகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர். குழு நடனம் – பிரிவு ஒன்றில் மத்திய மாகாணத்தில் முதலிடம் பெற்று அகில இலங்கை ரீதியிலான போட்டிக்கு தெரிவான இம்மாணவர்கள் தேசிய மட்ட போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. சிறப்பாக தம் திறமைகளை வெளிப்படுத்தி பாடசாலைக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்த இம் மாணவர்களுக்கும் பயிற்றுவித்த ஆசிரியை திருமதி. யோகேஸ்வரிக்கும் பாடசாலையின் அதிபர் திருமதி. கமலதர்ஷினி, பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு, நலன் விரும்பிகள், மற்றும் சமூகம் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவிக்கின்றனர்.